முற்பகல் 10-30.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக பயிர் செய்கிறார்களா குறுகிய காலம் பயிர் செய்கிறார்களா என்பதை விட அந்த நிலம் அரசினுடைய நிலமா, தனியாருடைய நிலமா என்பதைப் பார்த்து அது அரசினுடைய நிலமாக இருந்தால் அதில் பயிர் செய்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் பயிர் செய்கிறார்கள் என்பதை யோசிக்காமல் பயிர் செய்கிறவர்கள் தகுதி உடையவர்களா, தகுதி இல்லாதவர்களா-தகுதியா, தகுதி இல்லையா என்பது நிலம் அற்றவர்களா, ஏழை எளியவர்களா, பணக்காரர்களா? ஆதிக்கம் படைத்தவர்களா என்பதைப் பார்த்து தகுதி உடையவர்களுக்கு ஏழை எளியவர்களுக்கு கொடுப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சியையும் எடுக்கும். அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாணபுமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 46, திரு. ஆர். டி. அரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 47, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

47—

ஒவ்வொரு பள்ளியிலும் உடற்பயிற்சிக்கூடம் அமைத்தல்.

* 9574—டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒவ்வொரு பள்ளியிலும் உடற்பயிற்சிக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் உடற்பயிற்சிக் கூடம் (Indoor Gymnasium) அமைக்க போதிய நிதி வசதி இல்லாததால் எந்தவிதமான திட்டமும் அரசிடம் தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 பிப்ரவரி 10]

டாக்டர் எம். கருப்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தரணியெங்கும் இத்தமிழன் புகழ் பரவ வேண்டும். விளையாட்டு வீரர்கள் உலக அளவில் உன்னதமான தரத்தை எட்ட வேண்டும் என்பதற்காக நம் தாயகத்தின் பெயர் சொல்லும் அளவுக்கு விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற அவாவினால் வெறும் ஏழரை மாதங்களில் ஆசியாவினுடைய மிகப் பெரும் ஸ்டேடியத்தை உருவாக்கி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் மாண்புமிகு டாக்டர்புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், உறுதியான உடல் வளம் வேண்டும், அப்பொழுது தான் விளையாட்டு அரங்கில் வெற்றிப் புள்ளிகளை குவிக்க முடியும் என்று இளைஞர்களுக்கு எல்லாம் ஊக்கம் அளிக்கும் வகையில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு விளையாட்டு அரங்கத்தை உடற்பயிற்சிக் கூடத்தைத் தனியாருடைய உதவியினாலோ அல்லது அரசாங்கத்தினுடைய உதவியினாலோ அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளியிலேயும் மாணவர்கள் விளையாடுவதற்கான ஆடுதளங்கள் அமைப்பதற்காக ஆங்காங்கே முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இண்டோர் ஜிம்னாசியம் என்பது மிகவும் செலவாகக் கூடிய ஒரு ஏற்பாடு ஆகும். இது எல்லா பள்ளிகளிலேயும் அமைக்க கூடிய நிதி வசதி இப்போது இல்லை. இதைவிட முக்கியமாக முன்னுரிமை பெற்ற பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவது போன்ற அந்தப் பணிகளுக்கே போதுமான நிதி இல்லாத காரணத்தினால் இது போன்ற முயற்சிகளிலே இப்போது அரசு இறங்க முடியவில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியில் 1973-ஆம் ஆண்டு ஒரு ஜிம்னாசியம் கட்டப்பட்டது. அப்போதே கிட்டத்தட்ட 35 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டு உடற் பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு இதுவரை அதற்குரிய கருவிகள் வாங்கி போடப்படவில்லை. அதற்காவது அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட பள்ளிக் கூடத்தைப் பற்றிய விவரம் அமைச்சரிடம் இருக்காது. பொதுவான மூலக் கேள்வி கேட்டுவிட்டு, குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தைப் பற்றி துணைக் கேள்வி கேட்டால், அதற்குப் பதில் இருக்காது. தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 48—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.